REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 193

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: தை 13உ செவ்வாய் (26—1—54) ★ ★ ★ வெளியூர்: தை 14உ புதன் (27—1—54)

பேரறிஞர் எம். என். ராய் மறைந்தார்!

—:X:—

பகுத்தறிவு ஒளிச்சுடர் மங்கிவிட்டது

—(:)—

பத்து வயதிலேயே பயங்கரவாதியாக மாறிய பன்மொழிப் புலவர் பிரிந்தார்

'மர்ம மனிதர்' என்று புகழ் பெற்ற புரட்சிக் கனல் அவிந்தது!

☆

டேராடூன், ஜன. 25—

தோழர் எம். என். ராய்—ரேடிகல் டெமோகிராடிக் கட்சித் தலைவர்—இங்குள்ள தனது இல்லத்தில், திடீரென்று மூளையில் ரத்தம் உறைந்துபோனதின் காரணமாக, இரவு 11-50 மணிக்கு முடிவெய்தினார். அவருக்கு வயது 61-தான் ஆகிறது. கடந்த மூன்று தினங்களாகவே அவர் நோய்வாய்ப்பட்டு, படுக்கையில் இருந்துவந்தார்.

அந்தக் காலத்து பலாத்கார பயங்கரவாதிகளின் கூட்டத்துடன் சேர்ந்து, நாட்டுச் சேவையில் ஈடுபடுவதில் துவங்கிய அவருடைய அரசியல் வாழ்வு, காலஞ்சென்ற தோழர்கள் லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் போன்ற புரட்சித் தலைவர்களுடனும், உண்மைப் பேரறிஞர்களுடனும் மனப்பூர்வமாக ஒன்றுபட்டு, மார்க்சிய பாதை வழி இயங்கி, நியூ யூமானிசம் என்ற புதுமைத் தத்துவத்தில் வந்து முடிவுற்றது.

1893-ல் பிறந்த ராய், 20 ஆண்டும் முடிவதற்குள்ளாகவே பயங்கரவாதிகளுடன் 1903-ல் கலந்துகொண்டு 1906-ல் அரசியல் கொள்ளையின் காரணமாகக் குற்றவாளியானார்.

1908-ம் ஆண்டில் வங்காள அவுரா சதி வழக்கிலும், 1914-ல் சார்டன் ரீச் கொள்ளை வழக்கிலும் ராய் சம்மந்தப் படுத்தப்பட்டார்.

1914—18ல் பெரும் போரும் மூண்டது. பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின் பாதுகாப்புப் படையினரிடம் சிக்காமல், இந்தியாவை விட்டு வெளியேறி, சீனா சென்று, அங்கிருந்து அமெரிக்காவிற்குப் போய், மெக்சிகோ பிரதேசத்தில் நுழைந்து, ஒரு கம்யூனிஸ்டு கட்சியை உருவாக்கினார், ராய்.

லெனினுடைய அழைப்பின் மீது ராய், திருட்டுத்தனமாக வேறு ஒருவர் பெயருடன் கள்ள அனுமதிச் சீட்டு கொண்டு, ஸ்பெயின் வழியாக பிரான்ஸ்-ஜெர்மன் பிரதேசங்களைக் கடந்து, மாஸ்கோ சென்றடைந்து, லெனினைச் சந்தித்தார். ஆசியக் கீழ்நாட்டு விவகாரங்களில், ராய், லெனினுக்கு வலது கரம் போல் துணையாக இருந்துவந்தார்.

கம்யூனிஸ்டு அகிலத்தில் அவர் குறிப்பிடத்தகுந்த ஒரு உறுப்பினராகவும், கம்யூனிஸ்டு அகிலத்தின், கீழ் நாட்டுத் துறைத் தலைவராகவும் இருந்து பணி புரிந்திருக்கிறார்.

எட்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் லெனின், டிராட்ஸ்கியோடு கம்யூனிஸ்டு அகில செயற் குழு உறுப்பினர்களில் ஒருவராகவும் ராய் செயலாற்றியுள்ளார்.

சீனாவில், பொதுவுடைமைப் புரட்சியை ஊக்குவிப்பதற்காக ரஷ்யாவின் சார்பில் ராய் 1927-ல் சீனாவுக்கு அனுப்பப்பட்டார்.

காலனி தத்துவத்தில் ஏற்பட்ட கருத்துவேற்றுமையின் காரணமாக, ராய், ரஷ்யப் பொதுவுடைமையினரின் அதிருப்திக்குப் பாத்திரமானார். ராய் அவர்களின் வாழ்க்கையில் அந்தச் சம்பவம் ஒரு திருப்புமுகமாக அமைந்துவிட்டது.

1922-ல் 'வான்கார்ட்' என்ற இதழையும், 1928-ல் 'மாசஸ்' என்ற இதழையும் ராய் நடத்தினார்.

1927-ல் மாஸ்கோவில், கீழ்நாட்டுப் பல்கலைக் கழகத்தை நிறுவி, அதன் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் புரட்சியை உண்டுபண்ண, ராய், மாஸ்கோவில் இருந்த காலத்தில் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்.

1914-ல், இரகசியமாக இந்தியாவை விட்டு வெளியேறிய ராய், மீண்டும் இரகசியமாகவே இந்தியாவில் 1930-ல் கால் வைத்தார். ஓராண்டுக்குப்பிறகு பம்பாய் நகரில், ராய், போலீசாரால் கைது செய்யப்பட்டார். மீரத் சதி வழக்கில் அவர் தொடர்பு கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 6 ஆண்டு சிறைவாசம் கொடுக்கப்பட்டது. ஆனால், மீரத் சதி நடந்த 1924-ல், ராய், இந்தியாவிலேயே இல்லாமல் ரஷ்யாவில் இருந்து வந்திருக்கிறார்.

ஆறு ஆண்டின சிறையில் கழித்துவிட்டு, 1937 நவம்பர் 23-ந் தேதி அவர் விடுதலை அடைந்தார்.

சிறையிலிருந்து ராய் விடுபட்டதும் காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசின் செயலாளர் பதவியை ராய்க்குக் கொடுக்க காங்கிரஸ் தலைவர்

(4-ம் பக்கம் பார்க்க)

கோசல்ராம் தேர்தல் வழக்கு

அப்பீல் செய்ய சுப்ரீம் கோர்ட் அனுமதி

புதுடெல்லி, ஜன. 25—

கே. டி. கோசல்ராம் மனுவின் மீது சுப்ரீம் கோர்ட் இன்று உத்தரவுகள் பிறப்பித்தது.

வழக்கின் அந்த பைசலுக்கு ஒத்துழைக்க அவர் தயாராக இருப்பதாகவும், தன் நாணயத்தைக் காட்ட ஒருநாள் ஆஜர் பதிவு செய்து கொள்வதற்காகத் தவிர, மற்றப்படி அசெம்பிளியின் கூட்டம் எதிலும் கலந்து கொள்ள மாட்டாரென அவர் சார்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டதாலும், அவரை அப்பீல் செய்துகொள்ள சுப்ரீம் கோர்ட் அனுமதித்தது.

அப்பீல் பைசலாகும்வரை தேர்தல் கோர்ட்டின் தீர்ப்பை கெஜட்டில் பிரசுரிக்காதிருக்கும்படி சுப்ரீம்கோர்ட்டால் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மனுதார் சார்பில் என். சி. சாட்டர்ஜி, டாக்டர் எ. கிருஷ்ணசாமி, ஏ. என். சின்ஹா, ஆகியோரும், எதிர் மனுதார் மேகநாதன் சார்பில் கணபதி அய்யரும், தேர்தல் கமிஷனர் சார்பில் ஏ. மேதாவும் ஆஜராயினர்.

தூத்துக்குடி சதி வழக்கு

ஜனவரி 28-ந் தேதி விசாரணை தூத்துக்குடியில் நடைபெறும்

திருநெல்வேலி, ஜன. 25—

தூத்துக்குடி சதி வழக்கில் மேற்கொண்டு விசாரிக்கப்படவிருக்கும் பிராசிக்யூஷன் சாட்சிகளான வி. ஏ. சுப்ரமணிய அய்யர், சப்-இன்ஸ்பெக்டர் மாமூன்கான் ஆகியோரின் உடல் நலக் குறைவாலும், அவர்கள் ரயில் பிரயாணம் செய்யத் தகுதியற்றவர்களாக இருப்பதாலும், அவர்களுடைய சாட்சி விசாரணையை தூத்துக்குடியிலேயே வைத்துக் கொள்ளும்படி பப்ளிக் பிராசிக்யூட்டர் திண்ணப்பம் பிள்ளை விடுத்திருந்த மனுவை மாவட்ட மாஜிஸ்திரேட் எஸ். எ. அய்யாசாமி ஏற்றுக்கொண்டார். எதிர் தரப்பு வக்கீல்கள், இது சம்பந்தமாக எவ்வித மறுப்பும் சொல்லாததால், ஜன 28-ந் தேதி [illegible] வழக்கு விசாரணையை தூத்துக்குடியிலேயே நடத்தும்படி அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அகிர ஐயருக்கு மாவட்ட மாஜிஸ்திரேட் அனுமதி கொடுத்தார்.

பம்பாய் சர்க்காரின் குடியரசுப் பரிசு!

— (:) —

ஒரு தொழிலாளி மாண்டார்; ஆறு பேர் உயிர்வாதையில் உள்ளனர்

பம்பாய், ஜன. 25

'ஒரு தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டார்.'

'ஆறு தொழிலாளர் குண்டு காயங்களுக்கு உள்ளாயினர்.'

'தொழிலாளர்களைப் போலீஸ் தடிகொண்டு தாக்கியது.'

'தொழிலாளர்கள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசப்பட்டன.'

ஐந்தாண்டு குடியரசு தினத்தில், பம்பாய் சர்க்கார் கமலா ஆலைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்துள்ள கனிவான பரிசுப் பட்டியல் தான் மேலே கொடுக்கப்பட்டு இருக்கிறது.

கமலா ஆலைத் தொழிலாளர்கள் உள்வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றப் போலீஸ் படையினர் முயன்றனர். முயற்சி தடி, துப்பாக்கி சகிதம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்கள் கட்டுக்கடங்காமல் கல்லெறிந்தனர் என்றும் கூறப்படுகிறது. அதன் பிறகுதான் போலீஸ், குடியரசு பரிசளிக்கக் கிளம்பினதாகச் சொல்லப்படுகிறது.

முதல் முதலாகத் தடிகளையும், பிறகு கண்ணீர் புகைக் குண்டுகளையும், இறுதியாகத் துப்பாக்கியும் பயன்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

குண்டடிபட்ட அறுவருக்கு ஏற்பட்டுள்ள காயம் எத்தகையது என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

முன்னாள் மந்திரியின் அப்பீல் தள்ளுபடி

சென்னை, ஜன 25—

திரு—கொச்சி முன்னாள் மந்திரியான தோழியர் அன்னுமாஸ்கரீன், மற்றொரு மந்திரி ஜான் பிலிப்போஸ் என்பவரைப் பற்றி ஒரு பொதுக்கூட்டத்தில் அவதூறாகப் பேசியதாக திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்திரேட் தோழியர் மாஸ்கரீனுக்கு ரூ 400 அபராதம் விதித்தார். அதை ஆட்சேபித்து, தோழியர் மாஸ்கரீன் தாக்கல் செய்திருந்த அப்பீலை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சோமசுந்தரம் தள்ளுபடி செய்தார்.

'ஜிப்ரால்டரைத் திருப்பிக் கொடு'

ஸ்பெயினில் ஆர்ப்பாட்டம்

மாட்ரிட், ஜன. 25—

இங்குள்ள பிரிட்டிஷ் தூதர் அலுவலகத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஆயிரக்கணக்கான மாணவர்களை கலைப்பதற்காக போலீசார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர்; துப்பாக்கியின் அடிப்பாகத்தால் தாக்கவும் செய்தனர்.

மாணவர்கள் போலீசார்மீது கல் வீசியதில் ஒருவர் காயமடைந்தார்.

ஜிப்ரால்டரை ஸ்பெயினுக்குத் தரவேண்டுமென்று கோரி நடத்தப்பட்டதே இந்த ஆர்ப்பாட்டம். ஜிப்ரால்டருக்கு பிரிட்டிஷ் ராணி விஜயம் செய்யக் கூடாதென அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 26—1—1954 செவ்வாய்

உலக்கைக் கொழுந்து...!

சில பல காலமாகவே, பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திலும், குறிப்பாக சென்னை மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருக்கிற அமைச்சர் குழுவினருக்கும், ஆணை வழி இயங்கும் அரசு அலுவலர்களுக்கும், பழுது பார்க்க முடியாத அளவிற்குப் புத்தி தடுமாற்றம் ஏற்பட்டு இருக்கிறதோ என்று நாம் அஞ்ச வேண்டிய நிலை பிறந்திருக்கிறது.

ஒரு மத சாம்ராஜயத்தைச் செவ்வனே இயக்குவிக்கும் பொறுப்பில் இருக்கிறார்களா அல்லது நவீன மக்களாட்சி முறையை ஒழுங்காகத் திறம்பட நடத்தி, மக்களுக்கு வேண்டிய நலன்களை ஒன்றுக்குப் பலவாகப் பெருக்கித் தர இவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருக்கிறார்களா என்பதைக் கண்டறிவதற்குக்கூட, வெளிநாட்டு நிபுணர் குழுவிற்கு விட வேண்டிய நெருக்கடி இந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ளதென்றே நாம் உறுதியாக நம்புகிறோம். நாள் கூடக்கூட, இவர்களுடைய அறிவு நிலை துர்க்கந்தம் வீசும் சாக்கடைச் சேறாக, மிக மிகத் தீவிரமாக மாறிக்கொண்டு வருகிறது என்றே சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

வேறு எந்த நாட்டிலும் காணப்பெறாத ஒரு புதுமை, நடைபெறுவதாககூடக் கேட்டறியாத ஒரு விசித்திரம், இங்கு புயல் வேகத்தில் தினம் தினம் நிகழ்ந்து வருவதை அறிவுடை மக்கள் கண்டும் கேட்டும் வருகின்றனர். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற உயர்ந்த கோட்பாட்டினைக் கொண்டு இயங்கி வரும் மற்ற நாட்டு ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர், நமது மாநிலத்து ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்போல் செயலாற்ற முனைந்தால், அவர்கள் மீது, மக்கள் நலனைக் கட்டிக்காக்கும் கடமையினைத் துறந்து கோலாகல வாழ்வில் காலங்கழித்தனர் என்று குற்றஞ்சாட்டி, சிறைக்குள் தள்ளி மூடுவர், அந்தக் கோமாளிகளை, அக்கணமே! ஆனால், இங்கோ, இவர்கள், 'மேதா விலாசம்,' 'அறிவுக்கடல்' என்றெல்லாம் போற்றிப் பாராட்டப்படுகின்றனர். அத்துடன் நில்லாமல், தங்களுடைய தவறுகளையும், அறத்தின் நீங்கிய மறச் செயல்களையும், இந்த உலுத்தர்கள் மக்கள் கண்களுக்குப் படாமல் மறைக்கவும் முயற்சிக்கின்றனர். குறு மதியினரின் இந்தப் போக்கை மக்கள் உணராமல் இருக்கின்றனர் என்று சொல்வதற்கும் இல்லை. ஆனால், இந்த மக்கள் விரோதிகளுக்குத் தக்க பாடம் கற்பிக்க இன்னும் மக்கள் முனையவில்லை என்பது மட்டும் உண்மைதான். இப்படியே ஆளவந்தார்கள் போக்கு நீடித்து இருக்குமானால், மக்கள் இவர்களின அக்கிரமச் செயலைத் தடுத்து நிறுத்தும் காலம் அதி விரைவில் வந்தே தீரும் என்பதில் சந்தேகமில்லை.

தாயின் உலர்ந்த மார்பில் தன் பசிக்குப் பரிகாரம் காணாது கதறும் சிறு குழவியின் கதறலும், தனக்கும் மனைவிக்கும் ஒரு கவளம் சோறும் பெறமுடியாமல், தன் உழைப்பை விலை கூறிக் கொள்வாரின்றி உள்ளம் உடைந்த நல்லவன் விடும் கண்ணீரும், 'கடவுளின் கல் நெஞ்சைக் கரைக்கும்' கருவூலமாக இருக்கவேண்டும். குழவியின் கூக்குரலையும், திக்கற்றவனின் புலம்பலையும் கேட்க மறுக்கும் 'கடவுள்,' அரசியல் எத்தர்களின் போதனையையும், மதத் தரகர்களின் பிரார்த்தனையையும் செவிமடுத்து, அருள் சுரப்பார் என்றப் பேதமையை, இந்தக் காலத்திலும் நம்பிக் கிடக்க ஆள் கிடைப்பது அருபொருள் என்பதை இந்த அரசியல் பித்தலாட்டக்காரர்கள் அறியாதது போல் நடித்துத் திரிவது எள்ளி நகையாடத் தக்கதாகவே உள்ளது. நிற்க,

காழியூர் பிள்ளைக்குப் பார்வதி பொற் கிண்ணத்தில் ஞானப் பால் கொடுத்தாள்; வைகையில் தாயைப் பிரிந்த பன்றிக்குட்டிகளுக்கு சொக்கநாதர் தாய்ப் பன்றி உருவில் பாலூட்டி வளர்த்து அமைச்சர்களாக்கி விட்டார், என்ற அறிவுக்குப் பொருந்தாத பிரச்சார கற்பனைக் கதைகளை எல்லாம் நடைமுறைக்குக் கொணர இந்தக் காங்கிரஸ் அமைச்சர்களும், அவர் அலுவலர்களும் முயற்சிப்பது போலவே தெரிகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தப் பேராராய்ச்சிக்கும் கொஞ்சம் இடம் ஒதுக்கி இருக்கிறது போலும்!

அமைச்சர் ஆச்சாரியார்தான், தனது கோத்திரத்தின் குணத்திற்குப் பங்கம் ஏற்படாமல், 'கடவு'ளைக் காப்பாற்றக் கிளம்பி இருக்கிறார் என்றால், மற்ற எடுபிடிகளும் ஏன் அந்த வழியைப் பின்பற்ற முந்த வேண்டுமோ நாம் அறியோம்! இந்தக் கவைக்குதவாத காரியத்தைச் செய்யவா இந்த அற்புதச் சித்தர்களுக்கு நமது வரிப் பணத்தை ஊதியமாக மாதா மாதம் கொட்டி அழுகிறோம்? ஏழை கொடுக்கும் காசு இந்தப் பித்துக்குளிகளின் வாழ்வை வளமாக்கவா பயன்பட வேண்டும்? நிற்க,

அறநிலையப் பாதுகாப்புத் தலைவர் சில நாட்களாக மக்களை மடமையிலாழ்த்தும் திருப்பணியில் தனது அதிகாரம், அறிவு பூராவையும் செலவிட்டு வருகிறார் என்ற செய்தி வந்தவண்ணம் இருக்கிறது. ஆலயங்களில் மின்சார விளக்கு கூடாது என்பதில் துவங்கி, மருத்துவ நிலையங்களின் படுக்கையில் உயிருக்கு ஊசலாடிக்கொண்டு கிடக்கும் பிணியாளர்களுக்குத் திருநீறு தர, கட்டளை பிறப்பிக்கும் அளவிற்கு, அறநிலையப் பாதுகாப்புத் தலைவரின் பைத்தியம் முற்றிப்போய் இருக்கிறது. தூத்துக்குடி அரசியலார் மருத்துவ நிலையத்தில் படுத்துக் கிடக்கும் பிணியாளனை, பாண்டிய மன்னனாகக் கருதிக் கொண்டு, தம்மைத் தற்கால திருஞானசம்பந்தனாக எண்ணிக்கொண்டாரோ, என்னவோ, இந்த அறநிலையப் பாதுகாப்பு அதிகாரி; யார் கண்டார்கள்? அங்கு மருத்துவ நிலையத்தில் உள்ள பிணியாளர்களுக்கெல்லாம் சுடலைப் பொடியைக் கொடுக்கச் சொல்லி கட்டளை பிறப்பித்திருக்கிறாராம், இந்த அதிகாரி! இவர், அறிவு இருந்தவாறு என்னே! இவருடைய அறிவு நிலையை, உலக்கைக் கொழுந்து குந்தாணி வேர்' என்று சொல்லத்தான் செய்வர், இவருடைய சாம்பலால் பிணி நீங்காத பிணியாளர்கள்!

'மந்திரமாவது நீறு' என்ற திருநீற்றுப் பதிகத்தை ஓத, ஒரு ஓதுவார் அல்லது பூசாரியையும் நியமித்து இருக்கிறாராம், இந்தப் பெருந்தகை! இவருடைய சிவ நெறிப் பற்றை மக்கள் போற்றிப் புகழத்தான் செய்வ! ஆனால், அதற்கு அறிவுடைய மக்கள் ஒரு நிபந்தனையைப் போடத்தான் போடுவர். அதாவது, இந்த அறநிலையப் பாதுகாப்புத் துறைத் தலைவர் திங்கள் தோறும் வாங்கும் ரூபாய்களுக்குப் பதிலாக மூட்டை மூட்டையாகத் திருநீற்றை வாங்கிகொள்ள, அவர் முன்வர வேண்டும் என்பர். சொல்லைக் காட்டிலும் செயல் சிறந்தது என்பதை, தனது சொந்த விவகாரத்திலே நடத்திக் காட்ட உடனடியாக முன்வர வேண்டும். அப்பொழுதுதான், பாசத்தில் கட்டுண்டு கிடக்கும் பிணியாளர்களும், பாசம் கட்டறுந்து பதியுடன் இரண்டறக் கலக்க, திருநீற்றையே உயர்ந்த வழித் துணையாகக் கொள்ள முழு மனதுடன் முந்துவர். இல்லையானால், அறக்காப்பு அதிகாரியின் செயல் வெறும் எத்தன் செயலேயாகுமென்று பிணியாளர்கள் முடிவு கட்டி விடுவார்கள். அத்தகைய இழி நிலை இந்தத் தலைமை அலுவலருக்கு வரக்கூடாது என்பதுதான் நமது கவலை!

எனவே, சிவநெறியில், தமக்குள்ள நம்பிக்கையின் காரணமாகவும், சிவச் சின்னதில் தமக்குள்ள உறுதிப்பாட்டின் காரணமாகவும், வீட்டுப்பேற்றில் தமக்குள்ள பற்றுதலின் காரணமாகவும், சென்னை அரசியலார் அறநிலையப் பாதுகாப்புத் துறைத் தலைவர், உண்மையான அகப்புறத் துறவியாக மாறி விட்டார் என்ற தனிப் பெரும் நற்செய்தியைக் கேட்கும் நன்னாளையே நாம் மனமார எதிர்பார்க்கிறோம் என்று அவருக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்!

வீடின்றி தவிக்கும் தொழிலாளர்கள்

சென்னை கலெக்டரின் யோசனை

சென்னை, ஜன 26—

சேரி ஒழிப்பினால், வீடின்றித் தவிக்கும் அனாதைகள், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு தங்கு வசதியளிக்கும் முதலியவைகட்கு அந்தந்த சமூகத்தினர் தாராளமாக நிதி நன்கொடை அளிக்க முன்வர வேண்டும் என்று சென்னை கலெக்டர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சத்திரங்கள்—சாவடிகளை இத்துறையில் நன்கு பயன்படுத்திக் கொள்ள வழிவகைகளை ஆராய இவர் ஒரு மாநாடு கூட்டினார்.

அனாதைகள், தொழிலாளர்களில், வீடுவாசலின்றித் தவிக்கும் சுமார் 1000 குடும்பங்களை சத்திரங்களில் குடியேற்றலாம் என்றும் கலெக்டர் யோசனை தெரிவித்திருக்கிறார். இவர்கள் இப்போது வீதியின் ஓரங்களில் சமைத்துச் சாப்பிட்டு வருகிறார்கள்.

'வீதியின் ஓரங்களில் சமைத்துச் சாப்பிட்டு, நிராதரவாகக் காலங்கழிக்கும் ஏழைத் தொழிலாளர்கள் விஷயமாக, அவர்கள் குடியிருக்க ஏதாவது ஏற்பாடுகள் ஏன் செய்யக்கூடாது,' என்று முதல் மந்திரி இராசகோபாலாச்சாரியார் நகரசபை கமிஷனருக்கு எழுதியிருந்தார். மணிநகர் சத்திரத்திற்கு நகரசபை அலுவல் விடுதியிலிருந்து 160 பேர்களை மாற்றி, மணிநகர் சத்திரத்தில் இன்னும் சிலருக்குத் தங்க வசதியளிக்கலாம் என்ற யோசனையை நகரசபை கமிஷனர் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆசிரியர்கள்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜன. 26—

யூனியன் சர்க்கார் வேண்டுகோளின் பேரில், சென்னை சர்க்கார், ஜில்லா போர்டு விசேஷ அதிகாரிகளுக்கும், முனிசிபல் கவுன்சில் நிர்வாக அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள ஓர் உத்திரவில், மேற்கண்ட அதிகாரிகளின் மேற்பார்வையில் நடைபெறும் செகண்டரி பள்ளிக்கூடங்களில் சேவை செய்யும் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள ஆசிரியர்கள், கட்டுப்பாடின்றி 60 வயது வரை சேவை செய்யலாமென்று கூறியுள்ளனர்.

தலைமை ஆசிரியர் பதவி ஏற்றிருந்திருந்தால், கல்வி இலாகா டைரக்டர் உத்தரவின் பேரில் ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு அவர்கள் மீண்டும் சேவை செய்யலாம்.

இலங்கையின் சுதந்திரத் திருநாள்

சென்னை, ஜன. 26—

சென்னை நகரத்திலிருக்கும் சுமார் 100 பேர்களுக்கு மேலுள்ள சிங்களத் தலைவர்கள், எழும்பூர் தர்மபால மண்டபத்தில் பிப்ரவரி 4-ந் தேதியன்று மாலை இலங்கையின் ஆறும் ஆண்டு சுதந்திரத் திருநாளை கொண்டாடுவார்கள்.

சென்னைசர்வகலாசாலை துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் விழாவிற்குத் தலைமை வகிப்பார். சென்னை ஹைகோர்ட் நீதிபதி இ. இ. மாக், மற்றும் பல பிரமுகர்கள் அன்று மாலை சொற்பொழிவாற்றுவார்கள்.

சௌராஷ்டிரா பிரதமர் ராஜினாமா

கல்கத்தா, ஜன. 26—

சௌராஷ்டிரா பிரதமர் யூ. என். தீவர், ராஜப் பிரமுகிடம் ஏற்கனவே தன் ராஜினாமாவைச் சமர்ப்பித்து விட்டதாகத் தெரிய வருகிறது.

லண்டன், ஜன. 26—

மரக் கலத்தில் தண்ணீருக்குள் மூழ்கியிருக்கும் சப்மரைனை பிரிட்டிஷ் கடற்படை இரகசியமாகத் தயாரித்து வருகிறது. எந்த விதமான என்ஜின் என்பது பரம இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது.

நாகர் சாதுக்களின் நவீன யோசனை!

லண்டன், ஜன. 26—

பண்டித நேருவின் தலைமையில், ஐசன்ஹோவர், மாலென்கோவ், சர்ச்சில், மாசேதுங் எல்லோரும் நிர்வாணமாக இமயமலை மீது ஒன்றில் கூடிப் பேசினால் ஏற்பட்டுள்ள சிக்கலான பிரச்சினைகளையும் தீர்க்க வழி காண முடியும் என்று நாகர் சாதுக்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

விசித்திரமான போட்டி பந்தயம்

சின்னசேலம், ஜன. 25—

தமிழர் திருநாளாகிய பொங்கலின் இறுதிநாளில், இவ்வூரிலும், சுற்றுப் பக்க ஊர்களிலும் பல போட்டி பந்தயங்கள் நடைபெறுவது வழக்கம். அப்பந்தயம், இவ்வாண்டும் நடைபெற்றது. ஆனால் வழக்கத்திற்கு மாறாக ஒரு போட்டிப் பந்தயம் நடந்தது. இரண்டு உயர் வகுப்பினரைச் சேர்ந்தவர்களுக்குள் கீழ்க்கண்டவாறு போட்டி நடந்தது.

ஒரு உயர் ஜாதிக்காரர், மற்றொரு உயர்ஜாதிக்காரரைப் பார்த்து, "நீ இந்த 12 வயது வந்த ஆதிதிராவிடச் சிறுவனை ஊர்வலமாக எடுத்து வந்தால் உனக்கு ஒரு ரூபாய் தருகிறேன்," என்று சொன்னார். அதுபோன்றே அவர், ஆதிதிராவிடச் சிறுவனை ஊர்வலமாக சுமந்து வந்து ஒரு ரூபாய் பெற்றுக் கொண்டார். மற்ற நாளில் இவனைத் தொட்டுக்கொண்டால் தலை முழுகும் அவர், இச்செயலை செய்தது சாதி-மதம் ஒழிய ஓரளவு உதவியது.

கைதிகளுக்கு வீடு சென்று திரும்ப அனுமதி

லட்சுமணபுரி, ஜன. 26—

காசி ஜில்லாவில் கம்பியில்லாச் சிறை ஏற்பாடு வெற்றிகரமாக நடந்து வருவதின் காரணமாக அறுவடை, விதை விதைப்பு காலத்தில், கைதிகளை, அவர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று விட்டு, மீண்டும் சிறைக்கு வந்து விடும் ஏற்பாடுகளை அனுமதிக்க உத்தர பிரதேச சர்க்கார் முன் வந்துள்ளனர்.

அகதிகள் நிவாரண வேலை— இதுவரை ரூ 210 கோடி செலவு

புதுடில்லி, ஜன. 24—

இதுவரை பல்வேறு இனங்களில் அகதிகள் நிவாரணத்திற்காக ரூ. 210 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும், அகதிகள் எல்லாரையும் குடியும்—குடித்தனமுமாகச் செய்யத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விட்டதென்றும் அகதிகள் உதவி இலாகா மந்திரி கூறியுள்ளார்.

சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல்

செலவுகள் குறைப்பு!

புதுடில்லி, ஜன. 26—

சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீலுக்காகச் செலுத்தவேண்டிய பல்வேறு சட்டணங்கள், வக்கீலுக்குக் கொடுக்கவேண்டிய 'பீஸ்' ஆகியவைகள், குடியரசு தினம் முதல் குறைக்கப்படவிருக்கின்றன.

இப்போது அப்பீல் செய்து கொள்பவர், எந்தக் கோர்ட்டிலிருந்து அப்பீலுக்குச் செல்கிறாரோ அக்கோர்ட்டில் ரூ. 4000-க்கு ரொக்க ஜாமீன் கட்டவேண்டும்; இத்தொகை ரூ 2500 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

கையில் காலணா இல்லையென்று 'பாபர்' மனு கொடுக்கத் தயாராக இருந்தால், கோர்ட் கட்டணங்கள் எதுவுமின்றியே மனுவை அனுமதிக்கும்.

நிலக்கோட்டை தி. மு. இளைஞர் கழகம்

18—1—54 இரவு 10 மணியளவில், தோழர் ச. நடராசன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில், பங்குனி திங்கள் முதல் வாரத்தில் ஓர் நாடகம் நடத்துவதென்றும், நாடக மன்றத்திற்கு 'மறு மலர்ச்சி நாடக மன்றம்' எனப் பெயரிட்டும், அதற்குக் கீழ்க்கண்ட குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது:— தலைவர்: ப. நாகரத்தினம்; செயலாளர்: டி. சிவசாமி; பொருளாளர்: ச. நடராசன், மு.தவிக்கோட்டி.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

மயிலை—சென்னை

ரூயப்பேட்டை (44-வது வட்டம்) தி. மு. கழகச் சார்பில், கழகக் கொடி ஏற்றப்பட்டு, 12 மணியளவில் ஐநூறுக்கு மேற்பட்ட மக்களுக்கு கஞ்சி அளிக்கப்பட்டது.

குண்டலேரி

ஆற்காட்டிற்கடுத்த இவ்வூர் திராவிட இளைஞர்களால் விழா கொண்டாடப்பட்டது. பஞ்சாயத்து போர்டு தலைவர் ராஜகோபால் தலைமையில், தோழர் என். வி நடராசன் 'பொங்கல் விழாவும் திராவிடரும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

இரவு நடைபெற்ற 'ஏழையின் தோழன்' என்ற நாடகத்திற்கு தோழர் முகவை ஆர். எஸ் பாண்டியன் தலைமை தாங்கி 'நாடகமும் நாமும்' என்ற தலைப்பில் பேசினார்.

தேவக்கோட்டை

இந்நகர் தி. மு கழகச் சார்பில், நேதாஜி சதுக்கத்தில், மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். மாரிமுத்து தலைமையில், தோழர்கள் எம். எஸ். ராமசாமி, இராம. வெள்ளையன், குரு இதயமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் உ. சீனிவாசன் நன்றி கூறினார். பின்னர், "கலா" மன்றத்தின் சார்பில் காந்தி சதுக்கத்தில், "அவளுக்காக" என்ற நாடகம் திறந்தவெளியில் நடைபெற்றது நாடக முடிவில் நன்கு நடித்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கியும் பாராட்டியும் பேசினார்கள்.

இலங்கை

கொழும்பு ஜின்னர்ஸ் தெரு, தெற்கு அரசினர் பாடசாலை மண்டபத்தில் 19—1—54 மாலை 6-மணிக்கு தி. மு. கழகச் சார்பில், விழாப் பொதுக் கூட்டம் தோழர் குலசேகரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம் ஐ ராஜாமணி, டி எம். பீர்மகமது பேசியபின், சென்னை தோழர் க அன்பழகன் அவர்கள் வரலாற்றின் உண்மைப்படி சிங்கள மக்களுக்கும், நமக்கும் வேற்றுமை இல்லை என்றும், விவசாயத் தொழிலாளரின் உழைப்பின் உயர்வை குறிக்கும் இப் பொங்கல் விழாவில் சிங்களத் தோழர்களும் பங்கேற்று நடத்தலாமென்றும், அந்த வகையில் இலங்கை தி. மு. கழகத்தின் தொண்டு இருக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கூட்டம் முடிந்தபின், தோழர் அன்பழகன் அவர்களுக்கு மத்திய கழகச் சார்பில் தேநீர் விருந்தளிப்பு நடந்தது. அவ்வமயம் கழக முக்கியத் தோழர்கள் இலங்கையில் தி மு. கழகம் எவ்விதம் நடக்க வேண்டுமென்று அபிப்பிராயம் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

குள்ளம்பட்டி

இவ்வூர் தி மு. கழகச் சார்பில் விழா நடைபெற்றது. கழக தோழர்கள் முதல் நாளே கைத்தறித் துணிகளை விற்பனை செய்தனர். விழாவின் கடைசி தினத்தன்று பொது மக்களுடன் கழகத் தோழர்களும் இணைந்து தமிழர் மரபுக்குரிய வாத்தியங்களுடன் விளையாட்டு மைதானம் சென்று 'மாடு விரட்டும்' கேளிக்கை செய்து பெரு மகிழ்வெய்தினர். மற்றும் விளையாட்டு பந்தயங்கள் நடைபெற்றன.

சேவூர் (ஆரணி)

இவ்வூர் தி. மு கழகச் சார்பில் தோழர் வி இ. செயராமன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் குப்புசாமி, போளூர் சுப்ரமணியம், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசினர்.

போளூர்

24—1—54 மாலை, இவ்வூர் பழைய பஸ் நிலையத்தில், தோழர் போளூர்-சுப்ரமணியம் தலைமையில். நகர தி மு. கழகச் சார்பில் விழாக் கொண்டாடப்பட்டது. "பொங்கல் விழாவும் தி. மு. கழகமும்" என்னும் பொருள் பற்றி தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசினார்.

அப்புத்தலை

பிடாரத்த மலை, கிழக்கணக்கில் தி. மு. கழக தோழர்களால் விழா கொண்டாடப்பட்டது' 14-ந் தேதி இரவு 'தூக்குமேடை' என்ற நாடகம் தோழர் அ. மு பெரியான் தலைமையில் நடந்தது. 15ந் தேதி காலை தோட்டபிள்ளைகளுக்கு பொங்கல் விருந்தளிக்கப்பட்டது. பிற்பகல், தோழர் தேயிலைச் செழியன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். எம். நாதன், இரா. கோ. அன்பழகன், பண். முத்து, எழிலழகன், ஏ இளஞ்செழியன் பேசினர்.

செல்வபுரம்-கோவை

14—1—54 மாலை 7 மணிக்கு செல்வபுரம் பாண்டியன் படிப்பக சார்பில், 'பரப்பிரம்மம்' நாடகம் நடத்தப்பட்டது நாடகத்திற்கு முன்பு விழா சிறப்பு பற்றி பல தோழர்கள் பேசினர்.

நாடகம் பெருவாரியான மக்கள் கூட்டத்திற்கு முன்பு விமரிசையாய் நடத்தப்பட்டது தி மு. கழக செயலாளர் நன்றி கூற நாடகம் இரவு 12 மணிக்கு முடிவுற்றது. ஆத்தூக்குடி வழக்கு நிதிக்கு உண்டியல் எடுக்கப்பட்டது அதில் ரூ 1—5—0 சேர்ந்தது. நிதிக்கு ரூ 5 அனுப்பலாம் (பிறகு) என முடிவு செய்யப்பட்டது.

கருவம்பாளையம்—திருப்பூர்

15—1—54-ல், வள்ளுவர் படிப்பகத்தின் சார்பில், காலை 10 மணிக்கு தோழர் சோ. பழனிசாமி தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் க. சுப்ரமணியம் திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். தோழர் அ. மாரப்பன் சிறுவர், சிறுமியர்களுக்குத் தின்பண்டம் வழங்கினார். பின்னர், தோழர்கள் தாரை — ஒலியழகன், சோமசுந்தரம், கே. பழனிசாமி, ம. ப. கோவிந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாலை 6-30 மணிக்கு வள்ளுவர் திடலில் தோழர் பால்ராசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பொங்கல் விழாவைப் பற்றியும், தி. மு. க. சாதனைகள் பற்றியும், தோழர்கள் வீ. சண்முகநாதன், க ஆறுமுகம், அ. ச. இளங்கோ, மு முத்துசாத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் ம. ப. கோவிந்தசாமி நன்றி கூறினார்

நீடாமங்கலம்

விழாவை யொட்டி இலக்கிய நாடக மன்றத்தாரால் "மனப்புயல்" நாடகம் நடைபெற்றது.

அய்யம்பாளையம்

இவ்வூர் தி. மு. கழக சார்பில், நகரின் தெருவெல்லாம் நன்கு அலங்கரிக்கப்பட்டு, காலை 6 மணிக்கு ஒலிபெருக்கியின் மூலம் இசைத்தட்டுகளும், தலைவர்களின் பொன்மொழிகளும் ஒலிபரப்பப்பட்டன. மாலை 5 மணிக்கு ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று காந்தி திடல் வந்தடைந்தது. தோழர் மூ. அ. இரா. ஆறுமுகசாமி தலைமையில், தோழர் மீ. சு. இளமுருகு, தோழியர் பொற்செல்வி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு 9-30 மணிக்கு தோழர் இரா. காசி தலைமையில் புதுக்கோட்டை பி. எஸ் செல்வா, தோழர் சௌந்திரராசன் குழுவினருடன் இன்னிசை விருந்து சின்ன அய்யம்பாளையம் அண்ணா திடலில் நடைபெற்றது. ஆத்தூக்குடி வழக்கு நிதிக்கு ரூ 11—6—3 பொதுமக்கள் அளித்தனர்.

தெற்குபொய்கைநல்லூர்-(நாகை)

17—1—54 மாலை 6 மணிக்கு, தோழர் இ. அகமது தலைமையில் தி மு கழகச் சார்பில், நடைபெற்ற பொங்கல் விழாப் பொதுக் கூட்டத்தில் குடந்தை என். கே. சாமியும், மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

தமிழ் மன்றம்—மதுரை

மேலமாசி வீதியிலுள்ள தமிழ் மன்றத்தின் முன்பு தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு, தோழர் கே. எஸ். இராசமாண் தலைமையில் காலை 11 மணிக்கு 500 ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது.

ஆவடி

இவ்வூர் தி. மு. கழக சார்பில், தோழர் எம். எல். ஏ. ஈஸ்வரன் தலைமையில் 15—1—54 மாலை 6 மணிக்கு தேநீர் விருந்து விழா நடைபெற்றது. தோழர் ராஜரத்தினம் தன் குழுவினருடன், இசைவிருந்தளித்தார். தோழர்கள் செழியன், பொன்னரசு கோ. கோவிந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் மைசார் நன்றி கூறினார்.

வடக்கன்குளம்

சமதர்ம சதுக்கத்தில் வடவை தமிழறிவு இயக்க சார்பில், தோழர் எஸ். வீரபாகு தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் திராவிடமணி, சின்னதுரை, மோசஸ், மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். தோழர் இரா. ஏ. ரெத்தினசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலவாக்கொள்ளை

சிலோன், ஜன 22—

14—1—54 மாலை 4 மணியளவில், தோழர்கள் சி. செல்லையா, மு. இராமசாமி ஏற்பாட்டின்படி தோழர் இராமசாமி இல்லத்தில், காணுஓயா தோட்ட திராவிடத் தோழர்கள் பொங்கல் விழா கொண்டாடினர். தோழர்கள் செட்டி கருஞ்சிவலை, நல்லையா, செல்வன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தேநீர் விருந்துக்குப் பின், இசை நிகழ்ச்சி நடந்தது. முடிவில் தோழர் சந்தனம் அவர்கள், கூட்டத்தில் ஆத்தூக்குடி வழக்கு நிதிக்கு திரட்டித் தந்த ரூ 125ம் தோழர் செட்டி கருஞ்சிவலை பெற்றுக்கொண்டு நன்றி கூறினார்.

பம்பாய் தி. மு. கழக முதல் மாநாடு

மார்ச் இறுதியில் நடைபெறும்

தாராவி, ஜன. 25—

பம்பாய் தி. மு கழக முதல் மாநாட்டு செயற்குழுக் கூட்டம் 21—1—54 இரவு 8 மணிக்கு, தாராவி, கழக அலுவலகத்தில், வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் சு. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்றது.

தோழர் இரா. மா. சண்முகராசன் திராவிடப் பண் பாடினார்; மாநாட்டுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் கூட்டத்தின் நோக்கம்பற்றியும், மாநாடு தேதி நிர்ணயிக்க வேண்டியது சம்பந்தமாகவும் பேசினார்.

பின்னர், "பம்பாய் தி. மு. க. முதல் மாநாட்டை 1954 மார்ச் திங்கள் இறுதியில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது"

மாநாட்டில் கலந்துகொள்ள தோழர்கள் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், காஞ்சி கி. மனோகரன், இசைமுரசு நாகூர் அனிபா ஆகியோர் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

மாநாட்டுச் செயலாளர் தோழர் இ த மு இரா. ஹரிசங்கரன் நன்றி கூறினார்.

மல்லியக்கரை தி. மு. கழகம்

8—1—54 மாலை 4 மணிக்கு பெரியார் நகரிலுள்ள கழகக் கட்டிடத்தில் உறுப்பினர் கூட்டம் தோழர் எம். ஆர். கிருஷ்ணன் தலைமையில் கூடி, மாவட்டக் குழுவின் தீர்மானத்தின்படி ஆத்தூக்குடி வழக்கு நிதி திரட்டுவதென முடிவு செய்யப்பட்டது.

குனியமுத்தூர் தி. மு. கழகம்

10—1—54 இரவு $8\frac{1}{2}$-மணிக்கு தோழர் முருகானந்தம் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. ஏ. பி. முருகு செயலாளர் பதவியிலிருந்து விலகுவதாகத் தந்த கடிதத்தை அங்கீகரித்து, பொருளாளர் தோழர் தங்கமாணிக்கத்தை செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் அ. கிருஷ்ணன் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வரவு-செலவு இளங்கோ தோழர்கள் தங்கமாணிக்கம், க. இராமு, ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது தங்கமாணிக்கம் நன்றி கூறினார்.

'நாட்டாண்மை'

★

சென்னை, ஜன. 25—

21-1-54ல், சென்னை மாகாண மாஜிஸ்திரேட் முன் 'நாட்டாண்மை' எனும் அரசியல் இதழின் ஆசிரியராகவும், பிரசுரகர்த்தராகவும் தோழர் வெ. நாராயணன் அவர்கள் தன்னை பதிவு செய்து கொண்டிருக்கிறார்.

"ஏழையின் கண்ணீர்"

★

முக்கூடல், ஜன. 25—

இவ்வூர் மாணவ மன்றத்தார் 16—1—54ல் இரவு 9 மணிக்கு நகராட்சி மன்றத்தின் அருகாமையில் அமைத்தன்ன அரங்கில் "ஏழையின் கண்ணீர்" என்னும் நாடகத்தை இலவசமாக நடத்தினர்.

திருவள்ளுவர் மன்றம் (தி. மு. கழகக் கிளை) திறப்பு விழா

காஞ்சிபுரம், ஜன. 23—

காஞ்சிக்கடுத்த திருப்பக்குழி (பாலு செட்டி சத்திரம்)யில் நேற்றுமாலை 6 மணிக்கு தோழர் பி. எம். கருணாகரன் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் கொடியேற்றி வைத்தார்.

தோழர் சி. வி. எம். அண்ணாமலை, தோழர் அண்ணாதுரையின் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், "தி. மு. கழகம், மனித உரிமைக்காக ஏற்பட்ட கழகம், பிறப்பின் காரணமாக ஒருவன் தாழ்ந்தவன்—உயர்ந்தவன் என்ற பேதா பேதத்தை ஒழிக்கப் பாடுபடுகிறது," என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "தெருவுக்கு தெரு பஜனை கோயில் இருப்பதைப்போல், தி. மு. கழகம் ஒவ்வொரு தெருவிலும் இருக்கவேண்டும்; அதற்கான ஒத்துழைப்பை நீங்கள் அளிக்கவேண்டும்," என்றார்.

அடுத்து, தோழர் காஞ்சி—கல்யாணசுந்தரம் பேசுகையில், பிள்ளையார் உடைப்பை ஈ. வெ. ரா. மட்டும் செய்யவில்லை; நீங்களும் ஒவ்வொரு ஆண்டு செய்கிறீர்கள்; கடவுள் இல்லை என்று கூறவில்லை—ஆனால், கடவுளின் பேரால் சுரண்டப்படுவதை எதிர்க்கிறோம்; ஜாதிகள் இல்லை என்று கூறுகிறோம் என்றால், ஜாதியின் பேரால் ஒருவனை தாழ்ந்தவன் — உயர்ந்தவன் எனப் பாகுபாடுசெய்வதைஎதிர்க்கிறோம்,' என்று குறிப்பிட்டார்.

அடுத்து தோழர் என். வி. நடராசன் பேசுகையில், "அன்பே சிவம் என்று சைவம் சொல்லுகிறது; ஆனால், அது நடைமுறையில் ஆயிரக்கணக்கான கடவுள்களை உற்பத்தி செய்திருக்கிறது; கடவுளின் பேரால் செய்யப்படும் லீலா விநோதங்களை கண்டிக்கிறோம்; ஏனெனில், அது நடைமுறைக்கு, இயற்கைக்குப் புறம்பானது; நாங்கள் பார்ப்பனர் துவேஷிகளல்ல; பார்ப்பனீயத்தைத்தான் வெறுக்கிறோம்; அரசியல், பொருளாதார, சமுதாய விடுதலைக்காகப் பாடுபடும் ஒரு பெரிய அரசியல் ஜனநாயகக் கட்சி தி. மு. கழகம் ஒன்றேதான்," என்று குறிப்பிட்டார்.

இரவு "இளைஞன் குரல்" என்ற நாடகம் நாமல் தி. மு. கழகத் தோழர்களால் நடிக்கப்பட்டது. தோழர் கா. வெ. முருகேசன் இசை வழங்கினார்.

குறிப்பு:— பி. எம். கருணாகரன் (துரிய வைபேர்) அரியமுயற்சி பாராட்டத்தக்கது)

திருத்தம்

17—1—54 அன்று அண்ணாமலை நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களிடம், 'சிதம்பரம் மளிகை வியாபாரிகள் சார்பாக 301 காலணாக்கள் கொண்ட பணமுடிப்பு ஆத்தூக்குடி நிதிக்காக கொடுக்கப்பட்டது,' என 22—1—54 'நம் நாடு' இதழில் வெளி வந்திருப்பதை, "மளிகைக் கடை சிப்பந்திகள் சார்பாக" என்று திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம். —ஆசிரியர்.

★ ★ அண்ணன்மார்களே! 'தம்பி' உங்கள் ஊருக்கு வருகிறானா? ★ ★

"தம்பி"
அரசியல் வார வெளியீடு
ஆசிரியர்: தில்லை வில்லாளன்
தனி இதழ்: இரண்டணா

மூன்று மாதங்களாக 'தம்பி' வந்துகொண்டிருக்கிறான் ★ 30—1—54 இதழ் முதல் அரசியல் சிறு கதைப் பரிசுத் திட்டம் ஆரம்பம் ★ முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை

விபரங்களுக்கு: 'தம்பி' அலுவலகம், சிதம்பரம்.

ஐதராபாதில் புதிய மந்திரி சபை

புதன்கிழமையன்று பொறுப்பேற்கும்

ஐதராபாத், ஜன. 25—மாநில முதன் மந்திரி ஆர். பி ராமகிருஷ்ண ராவ், இன்று திருத்தியமைக்கப்பட்ட 8 பேர் கொண்ட புது மந்திரி சபையில் யார் யார் இருப்பார்கள் என்பதை அறிவித்தார். ஒரு பெண் உட்பட ஆறு அல்லது ஏழு துணை மந்திரிகள் நியமிக்கப் போவதாகவும் அவர்கள் பெயர்கள் பிப்ரவரியில் அறிவிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

நாளை மறுநாள் (புதன்) அன்று புது மந்திரிசபை பதவியேற்கும்.

புதிய மந்திரிசபையில் அன்னு ராவ் கானமுகி, தேவ சிங், சௌஹான், சங்கர தேவ் ஆகியோர் இடம் பெறவில்லை.

ஐதராபாத் பிரபல வக்கீலும், காங்கிரஸ் சட்டசபைக் கட்சி முக்கியஸ்தருமான கோபால் ராவ் புதிய மந்திரிகளில் ஒருவராவார். மந்திரிகளின் இலாக்காக்களிலும் மாறுதல் இருக்குமென்றும், 27-ந் தேதி இலாகா பிரிவினை விவரம் அறிவிக்கப்படுமென்றும் முதன் மந்திரி கூறினார். மந்திரிகளின் பெயர்கள் வருமாறு:—ராமகிருஷ்ண ராவ் (முதலமைச்சர்), பி. கே. வெங்கட ரங்க ரெட்டி, டி ஜி. பந்து, வினுபகராவ் வித்யாலங்கார், நவாப் மேதி நவாஸ்ஜங், டாக்டர் ஜி. எஸ். மேல்கோட், டாக்டர் எம். சென்னு ரெட்டி, கோபால் ராவ் எக்போட்.

திரு. வி. க. மன்றம் அமைப்பு

14—1—54-ல், திருச்சி 18-வது வட்டம் இளைஞர்களால் திரு. வி. க. மன்றம் அமைக்கப்பட்டது. அதுபோது, பொறுப்பாளராக எம். ராமலிங்கம், கூட்டுப் பொறுப்பாளராக ஆர். பெரியசாமி, பொருள் காப்பாளராக எம். பாலன் மற்றும் பலர் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்றைய தினம் சுமார் 200 ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது.

கள்ளிவலசு பகுத்தறிவு படிப்பகம்

18—1—54-ல், நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய செயற் குழுவினராகத் தோழர்கள் ஆர். எஸ். வேலன் தலைவராகவும், ப. குறள்தாசன் செயலாளராகவும், சி. திருமூர்த்தி பொருளாளராகவும், க. பழனிச்சாமி விளம்பர உறுப்பினராகவும்; கமிட்டி உறுப்பினர்களாக கா. பொன்னுச்சாமி, பொ. அய்யாச்சாமி, கே. எஸ். மணி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவள்ளுவர் வாசகசாலை திறப்பு விழா

14—1—54 மாலை 5-30-க்கு, தோழர் சா. சிவப்பிரகாசம் தலைமையில், தோழர் எம். பழனியாண்டி, எம். எல். ஏ, வாசகசாலையைத் திறந்துவைத்தார். தலைவர், திருவள்ளுவரின் ஆற்றலையும் திருக்குறளின் பெருமையையும் எடுத்துரைத்தார். திறப்பாளர், தேர்த்தர மக்கள் கன்னியிடையே மாணவர்கள் பயிலவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தோழர் மாடாண்டி குறள் வகுப்பு நடத்த உதவி புரியுமாறு கேட்டினார்.

"ஆதிரை"

31—1—54 பகல் 12 மணிக்கு திருச்சி வானொலியில் 'பகுத்தறிவு' ஆசிரியர் தோழர் ப. கண்ணன் எழுதிய "ஆதிரை" என்ற நாடகம் நடைபெறும். வி. லட்சுமி, எஸ். நடராசன், பி. வி. ரெங்குடு ஆகியோர் நடிக்கின்றனர்.

பொதுவுடைமைக் கட்சி காரியதரிசிக்குத் தண்டனை

6 வார சிறைத் தண்டனை; ரூ. 1,000 அபராதம்

கொழும்பு, ஜன. 25—இலங்கை பொதுவுடைமைக் கட்சி பொதுக்காரியதரிசி டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கிற்கு இலங்கை சுப்ரீம் கோர்ட் 6 வார சிறைத் தண்டனையும், ரூ 1000 அபராதமும் விதித்தது. கோர்ட்டை அவமதித்ததாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அதற்கு அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

"தாலமுத்து"

பாலப்பட்டி தி. மு. கழகத் தோழர் கந்தசாமி அவர்கள் துணைவியார் கருப்பம்மாள் அவர்களுக்கு, 26—12—53ல், ஆண் மகவு பிறந்ததின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு வழங்கப்பட்டது. குழந்தைக்கு "தாளமுத்து" எனப் பெயரிடப்பட்டது.

கிராம சீர்திருத்த வாலிபர் கழகம் துவக்கம்

தென்னாற்காடு மாவட்டம், மா. பொடையூர் கிராமத்தில், 10—1—54 இரவு 7 மணிக்கு, தோழர் தி. மு. மு. நாராயணன் தலைமையில், தோழர் பெ. வெங்கடாஜலனார் அவர்களால் கழகம் திறந்து வைக்கப்பட்டது. தோழர்கள் வே. ஆனைமுத்து, செஞ்சி, ம. அ. நடராஜகண்டர், ரா. தனராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஆர். வடமலை நன்றி கூறினார்.

கீழ்விசாரம் தி.மு. கழகம்

14—1—54 இரவு எட்டு மணிக்கு கழக உறுப்பினர் கூட்டத்தில் புதிய செயற்குழு கூட்டத்தில், தோழர்கள் கெ. ஜெயவேல் செயலாளராகவும், க மாணிக்கம் துணைச் செயலாளராகவும், ஜியாவுதீன் பொருளாளராகவும், பெருமாள்சாமி விளம்பர உறுப்பினராகவும், முனிசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், மற்றும் 12 பேர் மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மறுமலர்ச்சி நாடக மன்றம்

சங்கராபுரம் கோவிலில், 13—1—54 இரவு 8 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் டி. ஆர். சுப்ரமணியம் தலைமையில் மறுமலர்ச்சி நாடக மன்ற அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் மறுமலர்ச்சி நாடகம் அவசியம் குறித்து பேசிய பிறகு, செயல் கமிட்டி நிறுவப்பட்டது:— செயலாளர் ஆ. கந்தசாமி; துணைச்செயலாளர் கோ. நாராயணன்; பொருளாளர் டி. ஆர். சுப்ரமணியம்; மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தே. ப ரயில்வேமென் யூனியன் திருவண்ணாமலை கிளை

17—1—54ல், இக்கிளையின் நிர்வாகக் குழுக் கூட்டம் பேரூரில் தோழர் டி. என். வீராசாமி தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் என். ராகவானந்தம், ஐசையா ஆகியோர் பேசினர் வீட்டு வாடகை உயர்வை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

18—1—54ல், பெருந்துறையில் நடந்த கைப்பந்து விளையாட்டுப் போட்டியில், தோழர்களான: டி. என். வீராசாமி, சி. குப்புசாமி, ஏ சீனுவாசன, கே. நாராயணசாமி, கே. ராஜாவெங்கடராவ், என். சுந்தரம் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பேரறிஞர் எம். என். ராய்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் வலிய முன் வந்தனர்; ஆனால், அப்பதவியை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

காங்கிரசில சேர்ந்த அந்நாளை காந்தியார் அவர்களிடம் ராய் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார். அன்று மாலைப் பிரார்த்தனைக்கு ராய் அவர்களை காந்தியார் உடன்வர அழைத்தார்; ராய் கண்ணியமாக மறுத்து விட்டார்.

ராம்கார் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் அபுல் கலாம் ஆசாத் அவர்களுடன் போட்டியிட்டு அவர் தோல்வி கண்டார்.

1940-ல் காங்கிரஸ் கட்சியை உதறித் தள்ளிவிட்டு, ராடிகல் டெமோகிராடிக் கட்சியையும், இந்தியன் பெடரேஷன் ஆப் லேபர் என்ற தொழிற் சங்கத்தையும் துவக்கினர். சென்ற யுத்தத்தில், பாசிசம் வெற்றி பெற்றால் உலகில் எங்கும் ஜனநாயகம் அழிந்துபடும் என்று தகுந்த காரணம் காட்டி, இந்திய சர்க்காரின் போர் முயற்சிக்குத் தீவிரமாக ஆதரவு கொடுத்தார்

அதன் பிறகு, முதன் முதலாக, இந்தியத் துணைக்கண்டத்துக்கென சிறந்ததொரு பொருளாதார திட்டத்தை 'பீபிள்ஸ் பிளான்' என்ற பெயரில் உருவாக்கின பெருமை முழுதும் ராய் அவர்களையே சேர்ந்ததாகும்.

1950-ல் தனது அரசியல் கட்சியையும் கலைத்துவிட்டு, மார்க்ஸ் தத்துவத்திலும் தனது அரசியல் கருத்து மாறுபட்டது என்றும், முற்போக்கானது என்றும் அவர் அறிவித்தார். அந்தத் தத்துவத்திற்குத்தான் அவர் 'நியூ ஹியூமானிசம்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ராய் 17 மொழிகளைக் கற்றுள்ள மேதை. ஆங்கிலம் ஜெர்மன், பிரெஞ்சு, ரஷ்யன் ஆகிய மொழிகளில் அவர் நூற்கள் இயற்றியுள்ளார்.

அவருடைய நூற்களில் சிறந்தவையாக உள்ளவை 'சீனாவில் புரட்சியும் எதிர் புரட்சியும்,' 'இரஷ்யப் புரட்சி,' 'மறுமலர்ச்சி,' 'மெட்டீரியலிசம்' போன்றவையாகும். மற்ற நூற்களும் அறிவுத் துறையில் குறைந்துள்ளவை அல்ல.

இந்திய மறுமலர்ச்சி சங்கத்தைக் கண்டு, அதனைக் கட்டிக் காத்து வந்தார். 'ராடிகல் ஹியூமானிஸ்ட்' என்ற ஆங்கில வாரஇதழுக்கும், 'ஹியூமானிஸ்ட் வே' என்ற முத்திங்கள் முறை ஆங்கில இதழுக்கும் ராய் ஆசிரியராக இருந்தார்.

எம். என். ராய் அவர்கள் அறிஞர்களுக்கெல்லாம் அறிஞராய்த் திகழ்ந்தவர். பரந்த உலகியல் அறிவும், விஞ்ஞானப் பேரறிவும், வரலாற்றுப் புலமையும் வாய்க்கப்பெற்றவர். ஒரு ராய் மறைந்தாலும், தம்மைப் போன்ற பல ராய்களை இந்தியத் துணைக் கண்டம் முழுதும் உருவாக்கி வைத்துள்ள பெருமை அவருக்கு என்றும் உண்டு.

அவருடைய இயற்கை பெயர் நரேந்திரநாத் பட்டாச்சாரியா என்பதாகும்.

1952-ல் சறுக்கி விழுந்து கால் எலும்பு முறிவின் காரணமாகப் படுக்கையில் படுத்தவர், முழுக் குணம் பெற்று மீண்டும் அறிவுப் பணி புரிய ஒரு வாய்ப்பும் பெறாமலே கண்ணை மூடிவிட்டார்

அவருடைய மருத்துவச் செலவிற்காக குடியரசு தலைவர் ராஜேந்திர பிரசாத் தனது தலைவர் நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் தருமாறு உத்திரவிட்டு இருந்ததை அனைவரும் அறிவர்.

கழகக் கூட்டங்கள்

★

திருவத்திபுரம்

பொங்கல் விழா

27—1—54 புதன்

தலைவர்: போ. க இராமன்

பேசுவோர்:

ஏ. கோவிந்தசாமி எம் எல் ஏ.

வி. எஸ். கோவிந்தராசன்

28—1—54 வியாழன்

தலைவர்: மா. இராஜு

(தலைவர், வாராட்சி மன்றம்)

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

காஞ்சி கல்யாணசுந்தரம்

உடுமலை

28—1—54 மாலை 6 30 மணியளவில், பசேவோ திடலில், தோழர் மே. சி. சிதம்பரனார் தலைமையில் திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் மன்ற 2-ம் ஆண்டு விழாவும், கலைவாணன் நினைவுப் படிப்பகம், திருவள்ளுவர் மன்றம் இவைகளின் சார்பில் பொங்கல் விழாவும் நடைபெறும். அதுபோது தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாடு

27-1-54 பகல் 2 மணிக்கு, திருப்பத்தூர், மீனாட்சி தியேட்டரில், தோழர் ஏ. ஜெயராமன், எம். பி. தலைமையில் நடைபெறும், மாநாடு ஆரம்பித்து வைப்பவர்: தோழர் வி. வீராசாமி, எம். பி.; கொடியேற்றுபவர்: தோழர் எம். கிருஷ்ணசாமி; பேசுவோர்: தோழர்கள் பி. என். ராஜபோஜ், எம். பி., தசரதன், எம். எல்., ஏ., ரத்தினம், எம் எல் ஏ.

தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக செயற் குழு கூட்டம்

16—1—54ல், தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் திருப்பாப்புலியூரில் மாவட்டச் செயலாளர் தோழர் ஆர் பாலகுருசாமி தலைமையில் கூடியது. 33 உறுப்பினர்கள் வந்திருந்தனர். பிரத்தியேக அழைப்பின் பேரில், தோழர் ஏ கோவிந்தசாமி எம். எல் ஏ, தில்லை-வில்லாளன் ஆகியோரும் வந்திருந்தனர்.

அதுபோது, பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களுக்கும், அவரோடு சிறை சென்ற மற்ற நால்வருக்கும் விழுப்புரத்தில் வரவேற்பு நடத்தி, அத்துக்குடி நிதிக்கு 1000 தருவதென்றும், மற்றும் மாவட்ட மாநாட்டு வரவு—செலவு கணக்குகள் பற்றிய தீர்மானங்களும் நிறைவேறின.

திருமணம்

பெரியகுளம் தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் எம் கே. ஆறுமுகத்திற்கும்—தோழியர் ராஜலட்சுமிக்கும், வணிக வைசிய குல அபிவிருத்தி சங்கக் கட்டிடத்தில், 5-2-54 வெள்ளிக்கிழமை மாலை 9 மணிக்கு திருமணம் நடைபெறும். அது சமயம் 'சீர்திருத்தத் திருமணம்'' என்பதுபற்றி பலர் பேசுவர்.

பாரதி தமிழ்ச் சங்க 2-வது ஆண்டுவிழா

14-1-54ல், சாத்தூரை யடுத்துள்ள பெத்துரெட்டிபட்டியில், தோழர் ஈ வே அ வள்ளிமுத்து தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் சீனிவாசன் யாவரையும் வரவேற்றார். தலைவர், பாரதியின் பொதுவுடைமைக் கொள்கைகளை விளக்கினார். தோழர்கள் பி. மதிவாணன், தனுஷ்கோடி. உ. மகாலிங்கம் ஆகியோர் புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்துப் பேசினர். தோழர் வே. இராமகிருட்டிணன் ஆண்டு அறிக்கை வாசித்தார். பின்னர், காலையில், தோழர் செல்லசாமி தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தலைவர் பரிசுகள் வழங்கினார்.

திருநெல்வேலி ஆ. தி. மகாஜன சங்கம்—(பம்பாய் கிளை)

18—1—54ல், இரண்டாவது நிர்வாகக் குழு கூட்டம் வாழக்கட்டவாடி, குடிஅரசு நிலையத்தில், தோழர் ம ப. மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, சட்டக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட சட்டதிட்டங்களை ஒருசில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

மறைவு

திருக்கோட்டியூர் தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர் க. முனியாண்டி அவர்களின் மகன் கருணாநிதி 20—1—54 மாலை மறைந்தது குறித்து, கழகத் தோழர்கள் அனுதாபம் தெரிவித்துக் கொள்வதாக செயலாளர் கி. முத்துசாமி அறிவிக்கிறார்.

* * *

வேப்பம்பட்டி தி மு. கழக உறுப்பினர் தோழர் மா. பொன்னையா அவர்களின் மனைவி காசி அம்மாள் 19—1—54ல் இயற்கை யெய்தியதைக் குறித்து, கழகத் தோழர்கள் அனுதாபம் தெரிவிக்கச் சொல்லுவதாக தோழர் இளமதி அறிவிக்கிறார்.

* * *

கோட்டாறு தோழர் அழகப்பர் 19—1—54ல் இயற்கை யெய்தியது கேட்டு, இவ்வூர் தி. மு. கழகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாக செயலாளர் பிச்சாண்டி அறிவிக்கிறார்.

* * *

தஞ்சை திராவிடர் கழக முன்னாள் துணைத் தலைவர் பரிபூரணத் தம்மையார் வாழ்க்கைத் துணைவர் செ. பக்கிரிசாமி அவர்கள் தனது 68-வது வயதில் 12—1—54ல், இயற்கை யெய்தினார். அவரது சவ அடக்கம் சீர்திருத்த முறையில் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.